

**சமாதானத்தைக்**
**குலைத்தல் எப்படிச்**
**சாத்தியமாகும்:**

**செய்ய முடியாத**
**நிபந்தனைகளை**
**விதித்தல்.**
**இழுத்தடித்தல். நட்புத்**
**தன்மைகளை, சூழலை**
**இல்லாதொழித்தல்.**
**சமாதானத்திற்குச்**
**சாதகமான**
**கோட்பாட்டாளர்களை**
**அழித்தல்.**
**சிறுபான்மைக்**
**கருத்துள்ளோரை அழித்தல்.**
**திரும்பவும் திரும்பவும்**
**ஆயுதங்களாலும்**
**கொலைகளாலும்**
**சமாதானம் ஏற்படும்**
**என நம்பவைத்தல்.**

இதில்,


விவி நிகழ்ச்சி..02
மதமும் அரசியலும் ..04
பரிமாற்றம் ....06
வன்முறைக் ....08
வள்.. வள் ..10
வட்டுக்கோட் ...13
ஒளி பாசடைதல் ....17
கவிதை ....15
கானல் ...18
இந்தியாவில் ......19



விடிவு
கலாசார மையம்.

99 பெப்ரவரி
செய்தி மடல்
நிரல் - 26

# விபவி நிகழ்ச்சி

பெப்ரவரி

| | | |
|---|---|---|
| 13 சனி | மாதாந்த சினிமா<br>கே. பாலச்சந்தரின் 'ஒரு வீடு இரு வாசல்' | 3.30 பி. ப<br>WERC |
| 20 சனி | கலந்துரையாடல்<br>"முஸ்லிம் பண்பாடு"<br>தலைமை - சமீம் | 3.30 பி. ப<br>WERC |

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் நிகழ்ச்சி**

06. 02. 99 பி. ப 5.00 மணிக்கு 'இலக்கிய சொற்பொழிவு'

நிகழ்த்துபவர் : திருமதி வசந்தா வைத்தியநாதன்

இடம் : இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபம் கொழும்பு - 06.

## The British Council, 49, Alfred House Gardens, Colombo 3. Tel. 581171

### British Film Week (1949-1958)

| | | |
|---|---|---|
| 5 | *'The Third Man'* | 5.30 p.m. |
| 6 | *"Madeleine"* | 10.20 a.m. |
| | *'The Happiest Days of your Life'* | 3.30 p.m. |
| 8 | *'The Lavender Hill Mob'* | 5.30 p.m. |
| 9 | *"Animal Farm"* | 5.30 p.m. |
| 10 | *"The Maggie"* | 5.30 p.m. |
| 11 | *"An Inspector Calls"* | 5.30 p.m. |
| 12 | *"Thursday's Children"* | 5.30 p.m. |
| 13 | *"The Lady Killers"* | 10.30 a.m. |
| | *"Carlton-Brown of F.O"* | 3.30 p.m. |

18-20 *"Commentaries on Living II"*- b/w photographic exhibition by *Angelo de Mel*

25 *"New Technilogy and Copyright Issues"* a Colloquium presented by *Dr. D,M. Karunaratne*

## GOETHE-INSTITUT, 39, Gregory's Rd. Colombo 7. Tel. 694562

**"BERTOLT BRECHT AND HIS IMPACT ON SINHALA THEATRE"**

**10th February- 10.00 a.m. at Germal Cultural Institute**

*(Dharmasiri Bandaranayake, Somalatha Subasinghe, Henry Jayasena, Dr. Sunil Wijesiriwardena, Dr. Michael Fernando, R A G Edirisinghe)*

# மதமும் அரசியலும்

தமிழ் பேசும் மக்கள் மீதும் சிங்கள மக்கள் மீதும் இந்தக் கொடூர யுத்தம் பேரினவாத சக்திகளால் திணிக்கப்பட்டது. இது எமது மக்களுக்கு பெரும் பொருளாதார அழிவுகளையும் பாரிய உயிரிழப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இந்த யுத்தத்தை நடத்திக் கொண்டிருப்பவர்கள் இதைத் தொடர்ந்து நடத்த முடியாமலும் இதை முடிவுக்குக் கொண்டுவர முடியாமலும் திணறிக் கொண்டிருக்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் பணபலமும் ஆள்பலமும் பற்றாக்குறையாக இருப்பதே. அதேவேளை மக்கள் மத்தியில் இந்த யுத்தத்திற் கெதிரான உணர்வும் செயற்பாடுகளும் அதிகரித்து வருகின்றது. விலைவாசி வானத்தை எட்டிப்பிடித்துவிட்டது. மக்கள் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த யுத்தத்தினால் ஏற்படுகின்ற உயிரிழப்புக்கள் மக்கள் மத்தியில் யுத்தத்திற்கெதிரான வெறுப்பையும் எதிர்ப்பையும் அதிகரிக்கச் செய்கின்றது அத்துடன் இந்த யுத்தத்தினால் இந்த நாட்டின் பண்பாடு, கலை கலாசாரம் சீரழிந்து வருகின்றது. கொககோக்கோலாக் கலாசாரத்தின் ஆக்கிரமிப்பினால் போதைவஸ்துப் பாவனை, கொலை கொள்ளை, பாலியல் வல்லுறவுகளும் வன்முறைகளும் பெருகிக்கொண்டே வருகின்றன. மக்கள் மத்தியில் பேரினவாதத்தின் செல்வாக்கு சரிந்துவருகின்றது. இந்த சரிந்துவருகின்ற செல்வாக்கிற்கு முண்டுகொடுக்கும் வகையில் சில தீய சக்திகளும் வங்குறோட்டடைந்த அரசியல் கட்சிகளும் தாழ்வுச் சிக்கலுள்ள அரசியல் வாதிகளும் புத்தி ஜீவிகளும் சில இளைஞர்களைத் தூண்டிவிட்டு இனமத விரோதத்தை உண்டாக்கி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே குழப்பங்களையும் மோதல்களையும் ஏற்படுத்த முயறச்சிக்கிறன. இதன் வெளிப்பாடுதான் தீகவாபி புனித பூமிப் பிரச்சினையும் சீதஎலிய சீதை அம்மன் ஆலய புனரமைப்பும் புனித நகர் பிரச்சினையுமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் தீகவாபி புனித பிரதேசம் அமைந்துள்ளது. இந்த புனித பிரதேசக் காணிகள் முஸ்லிம் மக்களால் அபகரிக்கப்படுகின்றது என்று கூறிக்கொண்டு திகாமடுல்ல பௌத்த இளைஞர் அமைப்பு 02. 01. 99 சனிக்கிழமை ஒரு கூட்டத்தை நடத்தியுள்ளது. இந்த அமைப்பு அம்பாறை மாவட்டத்திலுள்ள முக்கிய பௌத்த விகாரைகளிலுள்ள பௌத்த பிக்குகளையும் பௌத்த மக்களையும் அழைத்திருந்தது.

தீகவாபி புனித பிரதேச பிரச்சினை சம்பந்தமாக வடகிழக்கு மாகாண பிரதம சங்கநாயக்கர் கிரிந்த வெல சோமரத்ன தேரர் இந்த திகாமடுல்ல பௌத்த இளைஞர் அமைப்பின் இனவாத செயலை எதிர்கின்றார். இந்த அமைப்பு ஓர் இனவாதக் குழு என்றும் இது சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களது ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றும் இதனை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

திகாமடுல்ல பௌத்த இளைஞர் அமைப்பின் முயற்சிக்கு அம்பாறை மாவட்ட பௌத்த சம்மேளனம் கடுமையான கண்டனத்தையும் ஆட்சேபனையையும் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள உகன புத்தசாசன பாதுகாப்பு அமைப்பின் செயலாளர் ஹெட்டிமுல்ல ராகுல தேரர் இந்த குழுவின் நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளார். அத்துடன் இப்படிப்பட்ட இனவாதக் கருத்துக்களையும் இனவாத நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு இயங்குபவர்களை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து தண்டித்தால்தான் இந்த நாட்டில் இனவாதத்திற்கு முடிவுகட்ட முடியும் என்று கூறியுள்ளார்.

'பிற இனமக்களுக்கு எதிராக ஊர்வலம் நடத்தி ஆர்ப்பாட்டம் செய்து புத்த சாசனத்தைப் பாதுகாக்குமாறு புத்த மதத்தில் கூறப்படவில்லை. இதில் அரசியல் பின்னணியொன்று செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது இது கண்டிக்கப்பட வேண்டியது!'

'தீகவாபி வேறு. ஆலிமுட சேனை வேறு. இது தீகவாபி பிரதேசத்திற்கு உள்பட்ட பகுதியல்ல. அரசியல் லாபம் தேடும் முயற்சிதான் இது. சிங்கள மக்களையும் முஸ்லிம் மக்களையும் குழப்பியடித்து, அந்த குழப்பிய குட்டையில் மீன் பிடிக்க முயல்வதே இச்செயல். இது அரசியல் நோக்கம் கொண்டது.' என அவர் சாடியுள்ளார்.

முஸ்லிம் மக்கள் 90 வீதம் வாழ்கின்ற அட்டாளைச்சேனை செயலர் பிரிவில்தான் தீகவாபி அமைந்துள்ளது. தீகவாபி தொடர்பான சகல விடயங்களையும் நிர்வாக ரீதியில் கையாள்வது அட்டாளைச்சேனை பிரதேசசபை செயலாளரேயாகும். அட்டாளைச்சேனை பிரதேச செயலர்

பிரிவிலுள்ள ஆலிம்சேனை என்ற இடத்தில் 40 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து, விவசாயம் செய்துகொண்டிருக்கின்றார்கள் முஸ்லிம் மக்கள். இவர்களது காணிகளை தீகவாபி புனித பிரதேசம் சுவிகரிக்க வேண்டுமென்று அம்பாறை மாவட்டத்திலுள்ள யூ. என். பி இளைஞர் அணி கூறுகின்றது. தீகவாபி புனித பிரதேசத்தின் 12000 ஏக்கர் காணியைப் பாதுகாக்க வேண்டுமென்று இளைஞர் அணி கூறுகின்றது. ஆனால் தீகவாபிக்கு 585 ஏக்கர் காணிதான் சொந்தமானது என்றும் ஆலிம்சேனையிலுள்ள காணி முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமானது என்றும் தீகவாபி விகாரையின் பிரதம தேரர் கூறுகின்றார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒலுவில் ஆலிம்சேனை ஆகிய பகுதிகளில் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்களின் குடியிருப்புக் காணிகளையும் அவர்களது விவசாயக் காணிகளையும் பௌத்த புனித பூமி என்ற போர்வையில் சுவீகரிப்பதற்கு எதிராக 24. 12. 98 இப்பகுதியிலுள்ள முஸ்லிம் மகக்ளால் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது. இந்த நில சுவீகரிப்பை ஹெட்டிமுல்ல ராகுல தேரர், மன்னப்புராவை புத்தரர் தேரர், கிரிந்தவெல சோமநாயக தேரர் ஆகிய மூவரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

திகாமடுல்ல பௌத்த இளைஞர் குழு அம்பாறை மாவட்டத்திலுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள மாணவர் அமைப்பின் ஒரு பகுதியினரால் உருவாக்கப்பட்டது. இப்பகுதியின் பாராளுமன்ற உறுப்பினரின் (யூ. என். பி) மகன்தான் இந்த குழுவினைச் செயற்படுத்துவதுடன், 02. 01. 99ல் நடந்த கூட்டத்தையும் ஏற்பாடு செய்தார். இந்தக் கூட்டம் அம்பாறை நகரசபை மண்டபத்தில் நடந்தது. அம்பாறை நகரசபைத்தலைவர் அமரசேன யூ. என். பி. உறுப்பினர் இவர் இந்த திகாமடுல்ல பௌத்த இளைஞர் நடாத்திய கூட்டத்தில் பங்கு பற்றியுள்ளதுடன், நகர சபை மண்டபத்தில் நடந்த கூட்டத்திற்கு வந்தவர்களையும் வரவேற்றார். இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றியோரின் எண்ணிக்கை 65 மட்டுமே.

நுவரெலிய சீதஎலியாவில் உல்லாசப் பயண சபையால் அமைக்கப்படவிருந்த இந்து ஆலயம், புனித நகர் திட்டப் பணிகளை மேற்கொள்ளும் திட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளது என்று உல்லாசப்பயண விமானப்போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்திற்கு நுவரெலியாவில் 35 ஏக்கர் நிலம் வழங்கப்படவிருந்தது. இந்த நிலம் அரசிற்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது.

'இந்தியாவில் பௌத்த மதத்திற்கு வழங்கப்படுகின்ற முக்கியத்துவம் பற்றி அறியாமல் சீதஎலிய நகரின் அபிவிருத்தித் திட்டத்தை எதிர்ப்பது விசனத்திற்குரியது. இந்தியாவில் பல பௌத்த விகாரைகள் உள்ளன. அங்கு பௌத்த விகாரைகளையோ அல்லது தங்குமடங்களையோ அமைப்பதற்கு எவ்வளவு காணி வேண்டுமானாலும் இந்திய அரசு எமக்கு வழங்கத்தயாராக உள்ளது. இந்த நிலையில் நுவரெலிய மாவட்டத்திலமைந்துள்ள சீதஎலிய நகரின் அபிவிருத்திக்காகவும் அந்த நகரில் ஆலயங்களை நிர்மாணிப்பதற்காகவும் சிறு துண்டு காணியை வழங்குவதால் எமது பௌத்த மதத்துக்கு எதுவித பாதிப்பும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. நாம் இங்கு ஆலயங்கள் அமைக்க அனுமதி மறுக்கும் பட்டத்தில் இந்தியாவிலுள்ள பௌத்த விகாரைகளை அப்புறப்படுத்தச் சொன்னால் எமது மனநிலை எப்படி இருக்கும் என்பதை எமது மக்கள் சிந்திக்க வேண்டும்' என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க தெரிவித்துள்ளார்.

'சீதஎலிய நகர் அபிவிருத்தித் திட்டத்தினால் எமது நாடு தமிழ் நாடாக மாறப்போகின்றது என்று சிலர் வதந்தி பரப்புகின்றனர். அதில் எதுவித உண்மையுமில்லை.'

இந்தியாவில் தங்குமிடம் அமைப்பதற்கு எமக்குக் கிடைக்கும் காணியின் பெறுமதி பல இலட்சம் ரூபா பெறுமதியானது. அதில்தான் அண்மையில் எமது ஜனாதிபதி தங்குமிடத்துக்கு அடிக்கல் நாட்டினார். மூன்று வாரங்களுக்கு முன்வேறு தங்குமிடங்களைக் கட்டுவதற்காக நான் இன்னும் சில காணிகளை இந்திய அரசிடம் கேட்டேன். அவர்கள் எவ்வளவு காணிகளையும் எமக்குத் தரத் தயாராக உள்ளனர். இந்தியாவில் எமது மாபோதி அமைப்புகள் 27 உள்ளன. இந்நிலையில் இவ்மைப்புகளையும் விகாரைகளையும் அகற்றச் சொன்னால் எமது நிலை என்ன?' இந்தியாவில் 'புத்தகாயா, சரனாலய' போன்ற இடங்களில் எமது விகாரைகள் உள்ளன. என்று திரு மங்களமுனசிங்க மேலும் தெரிவித்தார்.

'இன ஒற்றுமையையும் சமயங்களுக்கிடையேயான கூட்டுறவையும் நான் விரும்புபவன். ஆகவே இந்தியாவிலிருந்து வந்துள்ள பெருந்தொகையான இராம பக்தர்களுக்கு எனது பௌத்த

விகாரையின்மைதானத்தில் நிகழ்ச்சிகளை நடத்த அனுமதித்தேன். நுவரெலிய பிரதேசத்திலுள்ள எந்த ஒரு அமைப்போ அல்லது பௌத்தர்களோ இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் பிற மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே. இவர்கள் சீதஎலிய சீதை அம்மன் ஆலய விவகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் லாபம் தேட முயற்சிக்கின்றனர்.' என்று சீதஎலிய பௌத்த விகாரையின் பிரதம குருவான தம்மானந்த தேரோ 13. 01. 99 புதன் கிழமை தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சீதை அம்மன் ஆலய விவகாரம் ஒரு புனருத்தாரண அபிவிருத்தித் திட்டமாகும். இந்த ஆலய புனருத்தாரண அபிவிருத்தியை ஆலய பரிபாலன சபையினர் மேற்கொள்கின்றனர். சீதை அம்மன் ஆலயம் வேறு சீதஎலிய பௌத்த விகாரை வேறு. இரண்டுக்குமிடையில் சிறிது தூரமிருக்கின்றது. அது மாத்திரமல்ல இந்த சீதை அம்மன் ஆலய அபிவிருத்தி வேலைகளுக்கு எமது இலங்கை இராணுவமும் பல இலட்சம் ரூபா வழங்கியமை குறிப்பிடத்தக்கது,' என்று தமமானந்த தேரர் கூறியுள்ளார்.

சீதாஎலியாவிலுள்ள சீதை அம்மன் ஆலயத்திற்கு இந்தியாவிலிருந்து 800 இராம பக்தர்கள் வந்துள்ளார்கள். இவர்கள் சீதஎலியாவிலுள்ள பௌத்த விகாரையின் மைதானத்தில் தேரரின் அனுமதியுடனும் ஒத்துழைப்புடனும் 10 தினங்கள் இராமபஜனை நடத்தினர். இந்த நிகழ்ச்சிகள் நுவரெலிய அரசாங்க அதிபர் தர்மசேன ஹெட்டியாராச்சி, பொலீஸ் மா அதிபர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நடந்தது. மேற்படி இரு விடயங்கள் தொடர்பாக இவற்றுடன் எதுவித சம்பந்தமும் இல்லாத வெளிமாவட்டங்களிலுள்ள பேரினவாதக் குழுக்கள் இனங்கள் மத்தியிலுள்ள உறவைச் சீர்குலைத்துக் குழப்பங்களை ஏற்படுத்திச் செயற்பட்டன. தீகவாபி பிரச்சினை சம்பந்தமாக அந்தப் பிரதேசத்திற்கு வெளியேயுள்ள அம்பாறை, பௌத்த இளைஞர் சம்மேளனம் அம்பாறை நகர மண்டபத்தில் கூட்டத்தை நடத்தினர். இதேபோல டிசம்பர் 21ம் திகதி பொரளையிலுள்ள YMBA மண்டபத்தில் சீதஎலிய அபிவிருத்தி திட்டத்திற்கு எதிராக இனவாதக் குழுவால் கூட்டம் நிகழ்த்தப்பட்டது. கோவில்களுக்கும், கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் எதிராக பௌத்தமதத்தைப் பாதுகாப்பதற்கான அமைப்பு என்ற பெயரில் இக்கூட்டம் நிகழ்ந்தது. சிங்கள தமிழ் மக்கள் மத்தியிலுள்ள இனவாதக் குழுக்களின் தலைமையில் முனைப்பாகச் செயற்படுகின்ற சில அரசியல் வாதிகள், புத்திஜீவிகள், எழுத்தாள பிரமுகர்கள் மதத் தலைவர்கள் ஆகியோருக்கு இவர்களைச் சார்ந்த மொழியிலோ, இனத்திலோ, சாதியிலோ அல்லது மதத்திலோ எள்ளளவும் பற்றில்லை. இவர்கள் தங்களை அரசியல் ரீதியாக உயர்த்திக் கொள்ளவும், தங்களுக்குள்ள தாழ்வுச் சிக்கலினால் தங்களுடைய அந்தஸ்தை சமூகத்தில் உயர்த்திக்கொள்ளவும் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இனமத ரீதியான பேரினவாதக் கூக்குரலை எழுப்பியவாறிருக்கிறார்கள். இந்தத் துறையில் குறிப்பாக UNP ஆரம்பத்திலிருந்தே பேரினவாதச் செயற்பாட்டை மேற்கொண்டு வந்தது. 'ஸ்ரெஸ் கவுன்சிலில் தனிச்சிங்களப் பிரேரணையை முதல் முதல் எழுப்பியவர் திருவாளர் J.R ஜவர்த்தனா. அதே வேளை S.W.R.D பண்டாரநாயக்க அந்த கவுன்சிலில் தமிழ் மக்களுக்கு சமஸ்டி ஆட்சிமுறையை வழங்கவேண்டும் எனப் பிரேரித்த போது எதிர்த்தவர் J.R அதேபோல பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராகக் களனிக் கோவிலிலிருந்து புகழ்பெற்ற கண்டி யாத்திரையை பௌத்த பிக்குகளின் உதவியுடன் நடத்தி அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவித்தவர் J.R அகிம்சையைப் போதிக்கின்ற ஒரு பௌத்த குருவினால் பண்டாரநாயக கொலைசெய்யப்பட்டது மனங்கொள்ளத்தக்கது. ஆகவே UNP தனது அரசியல் அதிகாரத்தை நிலை நாட்டிக்கொள்வதற்கு மதத்தை ஒரு ஆயுதமாகப் பாவிக்கிறது. திருவாளர் J.R, K.M.Pராஜரட்ண, சிறில்மத்தியூ, ரஞ்சன் விஜரட்ண போன்ற பேரினவாத வாதிகள் இந்த நாட்டில் தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு இனத்தையும், மதத்தையும் ஆயுதமாகப் பாவித்துவந்துள்ளனர். அதே பாதையில்தான் தற்போதும் UNP இந்த மதத்தை அரசியல் இலாபத்திற்காகப் பாவிக்கின்றது. ஆகவே இந்த மதத்தை அரசியல் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும், அதேபோல மதத்தின் பிடியிலிருந்து அரசியலை விடுவிக்க வேண்டும் என ஏற்கனவே நாம் கூறியிருந்தோம். (தலதா மாளிகைத் தாக்குதல் பற்றிய கட்டுரையில்) புத்தபெருமான் அரண்மனையிலிருந்து அரசமரத்தடிக்குச் சென்றார். சிலர் அரசமரத்தடியிலிருந்து அரண்மனைக்கு வர அரசியலைப் பாவிக்கிறார்கள்.

## பரிமாற்றம்



# திரு. லால் ஹாஹெறாட.

'வார்த்தைகளை இணைத்துக் கவிதை புனைகின்றோம். அதேபோல பிம்பங்களையும் ஒளியூட்டலையும் இணைத்துப் புகைப்பட ஓவியம் புனைகின்றோம்.' என்கிறார் திரு லால் ஹெறாட. அதாவது கவிதைக் கலையிலும் புகைப்படக் கலையிலும் ஒத்திசைவைக் காண்கின்றார் இந்த சிருஷ்டிகர்த்தா திரு லால் ஹெறாட. அவர்கள் ஒரு கவிஞர் மாத்திரமல்ல அவர் இலங்கையில் புகழ் பெற்ற புகைப்படக்கலைஞர்களுக் முன்னணியில் நிற்பவர். இவரது புகைப்ப டங்களைப் பலர் புகைப்பட ஓவியங்கள் என்னும் புகைப்படக் கவிதைகள் என்றும் பாராட்டியுள்ளனர். அது மாத்திரமல்ல வர்ண ப்புகைப்படக் பதிவை எமது நாட்டில் அறிமுகப்படுத்தியவர்களில் முதன்மையானவர்.

திரு லால் அவர்கள் 1947ல் இராஜகிரியாவில் பிறந்தவர். இவர் மருதானையிலுள்ள ஒல்கொட் கல்லூரியில் (தற்போது இல்லை) தமது ஆரம்பக்கல்வியைப் பயின்று கொழும்பு தேஸ்ரன் கல்லூரியில் ஏ. எல் பரீட்சை சித்தி எய்தினார். இவரது தந்தை வில்சன் ஹாஹெறாட எமது நாட்டிலுள்ள பிரபல சிங்களக் கவிஞர்களில் ஒருவர். இவரது தாயாரும் ஒரு கவிஞர். சிறுவயதிலிருந்தே லாலுக்கு இலக்கியத்தில் ஆர்வமிருந்தது. கவிஞர்களான இவரது பெற்றோர்களிடமிருந்தே கவிதைக்கான ஆத்மார்த்த உணர்வையும் உத்வேகத்தையும் தாம் பெற்றுக்கொண்டதாகக் கூறுகிறார். 1994 ல் 'மா மினிசெக் ஒப கங்கக் நிஸா' (நான் ஒரு மனிதன் நீ கங்கை) என்ற முதலாவது கவிதைத் தொகுதி வெளியானது. இது 1995ல் அரச இலக்கிய விருதைப்பெற்றது. இதே நூல் உபாலி விஜவர்த்தன இலக்கிய விழா விருதையும் பெற்றதுடன், விபவி சுதந்திர இலக்கிய விழாவில் சிறந்த நூல் என்ற பாராட்டையும் அங்கீகாரத்தையும் பெற்றது. 1996ல் 'பஸ்சலொஸவக்க சந்த மகேய' (எனது பூரண சந்திரன்) என்ற கவிதைத்தொகுதி பிரசுரிக்கப்பட்டது. இந்த நூல் சுதந்திர இலக்கிய விழாவில் அங்கீகாரத்தையும் பாராட்டையும் பெற்றது. 1998ல் 'சந்துன் அறட்டு டஹவூட்' (நீ சந்தன பட்டைக்கு ஒளியூட்டினாய்) என்ற கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டது. மேலும் திரு லால் அவர்கள் புகைப்படக் கலை என்ற ஒரு நூலையும் வெளியிட்டுள்ளார்.

'இலக்கியத்தில் பல்வேறு துறைகளில் எனக்கு ஈடுபாடு இருக்கின்றது. ஆனால் கவிதைத்துறை தான் எனது முக்கிய கேந்திரமாக இருக்கின்றது. அதுதான் எனது மூச்சு. ஏனைய இலக்கியத்துறைகளில் அதாவது சிறுகதை, நாவல் துறைகளில் படைப்பாளி வாசகனுடன் சேர்ந்து பிரயாணம் செய்கின்றான். அதாவது சிருஷ்டிகர்த்தா தனது பாத்திரத்தின் மூலம் வாசகனை அந்தப் படைப்பின் இறுதிவரை அழைத்துச் செல்கிறான். ஆனால் கவிதைத்துறையில் ஒரு வாசகன் விரும்பினால்தான் சிருஷ்டிகர்த்தாவால் அழைத்துச் செல்லமுடியும். வாசகனின் ரசனை வேறுபட்டால் படைப்பாளியால் அவனை அழைத்துச்செல்லமுடியாது. வாசகர்களது ரசனை மட்டங்கள் வேறுபட்டவை. உதாரணத்திற்கு மூன்று வாசகர்களை எடுத்துக் கொண்டால் அவர்களது ரசனைத்தளங்கள் வேறுபட்டவையாக இருக்கும். அவர்கள் கவிதைத்துறையை வெவ்வேறு கண்ணோட்டங்களில் நோக்குவார்கள். அவர்களது ரசனைத்தளங்களும் வேறுபடும். ஆகவே ஒரு வாசகன் கவிஞனுடன் இணைந்தால் தான் அவனைத் தன்னுடன் அழைத்துச் செல்லமுடியும். இதில் யார்வென்றது யார் தோற்றது என்று கூறமுடியாது. கவிதை மின்னலைப்போன்றது. வாசகன் அந்தக் கவிதையிலுள்ள மின்னல் கீற்றைப் பற்றிக்கொண்டால் அவன் படைப்பாளியுடன் யாத்திரையை மேற்கொள்ள முடியும். அன்றேல் அவன் இடைநடுவில் தங்கிவிடுவான்.

'நவீன கவிதை இலகுவானது. அதை எல்லாரும் படைக்கலாம் என்று கூறுகின்றார்கள். அப்படி எண்ணிக்கொண்டுதான் பலரும் இத்துறையில் ஈடுபடுகின்றனர். ஆனால் இதில் எத்தனைபேர் வெற்றிகண்டனர். எத்தனைபேர் நிலைத்து நிற்கின்றனர். என்பதுதான் கேள்வி. நவீன கவிதை அல்லது புதுக்கவிதையில் உள்ளடக்கத்திற்குத்தான் முதலிடம். ஓசைநயம் இரண்டாம்பட்சமாக வருகின்றது. ஆனால் மரபுக்கவிதையில் இது எதிர்மறையாக இருக்கின்றது. புதுக்கவிதையில்

உணர்வை இலகுவில் வெளிப்படுத்த முடியும். மரபுக்கவிதையில் இது சிரமம். புதுக்கவிதையில் சுருங்கச் சொல்லி விளங்கவைக்க முடியும். அத்துடன் சொற்கள் இறுக்கமானதாக இருப்பதால் புனைதல் மிகவும் சிரமமானது. புதுக்கவிதை கும்மிருட்டில் தோன்றி மறையும் மின்னல் ஒளிபோடுகின்றது. அதில் ஒரு வித வேகமும் வீச்சும் பொதிந்திருக்க வேண்டும். அன்றேல் வாசகனை அதன்பால் ஈர்க்க முடியாது. மனித நேயமும் மனித அழிவும் பொதிந்தவையாக இருக்க வேண்டும் புதுக்கவிதையில் இவை இல்லாவிட்டால் அக்கவிதை வெறும் சொல் அடுக்குகளாக சடமாக இருக்கும். உயிர்த்துடிப்பற்றவையாக இருக்கும்.

கவிஞன் என்ற ரீதியில் நீங்கள் இந்த யுத்தத்தை எப்படி நோக்குகின்றீர்கள் என்று கேட்ட பொழுது அவர் கொதித்தெழுந்து கூறுகின்றார். 'கவிஞன் என்பதை விட்டுவிடுவோம். முதலில் மனிதன் என்ற வகையில் நான் இந்த யுத்தத்தை வெறுக்கின்றேன். கவிஞன் என்ற ஹோதாவில் நான் கடும்வெறுப்பும் கோபமும் கொண்டுள்ளேன். இதை நீங்கள் எனது கவிதைகளிலும் புகைப்படங்களிலும் தரிசிக்கலாம். ஆனால் நாங்கள் இருவரும் இலங்கையராக இருந்தும் துர்அதிஷ்டவசமாக எனது படைப்பை உங்களால் புரிந்துகொள்ள முடியாத நிலையிலுள்ளீர்கள். அதேபோல உங்கள் படைப்பை என்னால் புரிந்துகொள்ள முடியாத நிலை, இது வேதனைக்குரிய விடயம். இதுதான் எமக்கு எமது நாட்டுக்கு உள்ள துர்ப்பாக்கியநிலை. இதுகாலம் கடந்த விடயம். இப்பொழுதாவது நாம் உணர்ந்துள்ளோமா? காலம் தாமதியாது உடனடியாக, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் வழிவகைகளை நாம் இருவரும் அதாவது சிங்கள, தமிழ் இனங்கள் ஆரம்பிக்கவேண்டும். நாம் மனிதரென்றரீதியில் மனிதநேயத்துடனாவது சிந்தித்து செயல்படவேண்டும். இந்துமதமும் பௌத்தமதமும் வெவ்வேறானவையல்ல. இந்து மதத்தின் மறுமலர்ச்சிதான் பௌத்தம். இரண்டும் மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டவை. எமது கலைகலாசாரங்களில் கூட நாம் ஒருமைப்பாட்டைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதை நாம் இருவரும் புரிந்துகொள்ள வேண்டும். கலை இலக்கியத்தின் மூலம் ஓரளவு மனித உள்ளங்களை நெகிழவைத்து அவற்றைப் பண்படுத்த முடியும் எனநான் உறுதியாக நம்புகின்றேன்.'

தங்களின் புகைப்படக் கலைபற்றி.....

'புகைப்படத்துறையை நான் ஒரு தொழிலாகக் கொண்டிருந்தாலும் நான் அதை ஒரு கலையாக ஆத்மாத்த ரீதியாக உள்வாங்கிச் செயற்படுகின்றேன். கலை அம்சத்திற்குத் தான் நான் முதலிடம் கொடுக்கின்றேன். இதற்கு எனது புகைப்படங்கள் தான் சான்றுபகரும். 1998ல் 'புகைப்படக்கலை' என்றொரு நூலை வெளியிட்டேன். அத்துடன் 'ஹொட ஸ்கடல் ஒவ் போட்டோகிறாபி' நிறுவனத்தையும் நடத்துகின்றேன். ஆனால் கலைத்துவத்திற்குத்தான் நான் முதலிடம் கொடுக்கின்றேன்.

புகைப்படக் கலையும் கவிதைக்கலை போன்றதுதான். வார்த்தைகளை இணைத்து அவற்றிற்கு உயிரூட்டி கவிதைகளைப் புனைகின்றோம். அதேபோல பிம்பங்களையும் ஒளியூட்டலையும் ஒத்திசைவுபடுத்தி கலைப்படங்களைப்படைக்கின்றோம். கவிதையில் மின்னல் ஒளியுடன் உணர்வை வெளியிடுகின்றோம். அதேபோல் பிம்பங்களுக்கு ஒத்திசைவாக நொடிப்பொழுது ஒளியூட்டி பிரதிமைகளைப் படைக்கின்றோம். வர்ணப்புகைப்படங்கள் எடுப்பதில் நான் ஈடுபட்டிருந்தாலும் கறுப்பு வெள்ளைப் புகைப்படமெடுப்பதன் மூலம்தான் தலைசிறந்த உயிரோட்டமுள்ள கலைப் படைப்புக்களை உருவாக்க முடியும். கலை அம்சமுள்ள ஒரு புகைப்படம் கவிதை போன்றது கவிதை உணர்வுகளை வெளிப்படுத்துவதுபோல் புகைப்படத்திலும் உணர்வுகளை வெளிப்படுத்தமுடியும். ஓவிய சிற்ப செதுக்குவேலைகளுக்கு (தொழில் நுட்பக்கலை) பிற்புலமாகத்தான் மனிதன் நிற்கின்றான். கருவி முன்னணியில் நிற்கின்றது. ஆனால் புகைப்படக் கலையில் மனிதனும் கருவியும் ஒத்திசைந்து சிருஷ்டியைப் படைக்கின்றன. ஆனால் ஓவியம், சிற்பம் செதுக்கு வேலை புகைப்படக்கலை அனைத்துக்கும் ஆத்மார்த்த உணர்வும் மனித நேயமும் மேலோங்கி நிற்கவேண்டும். வார்த்தைகளின் ஒத்திசைவில் கவிதை ஜனிக்கின்றது. பிம்பங்கள் ஒளியூட்டல் ஆகியவற்றின் ஒத்திசைவில் கலைத்துவ புகைப்படப் படைப்பு சிருஷ்டியாகின்றது. கவிதைக் கலையும் புகைப்படக் கலையும் எனது இரு விழிகள். இக்கலை விழிகள் மூலம்தான் நான் மனிதனை நோக்குகின்றேன். மனிதனை நேசிக்கின்றேன். மனித நேயம்தான் எனது ஆத்மா' அமைதியான, ஆனால் ஆழமான உறுதியான கலை உணர்வுடன் கூறிமுடிக்கின்றார் கலைஞர் லால் ஹாஹெொட.

# வன்முறைக் கலாசார தேர்தல்

'எமக்கு சேவை செய்வதற்காக நீங்கள் ஒருவருக்கொருவர் போட்டிபோட்டு அடிபட்டுச் சாகின்றீர்கள்?' – ஒரு பெண்ணின் குரல்.

'உங்களுக்குள் நீங்களே ஒருவருடன் ஒருவர் சண்டை பிடிச்சால் எங்களுக்கு உங்களால் சேவை எவ்வாறு சேவைசெய்ய முடியும்?' – ஒரு ஆணின் கேள்வி.

'ஐயோ! எங்களை அமைதியாயிருக்கவிடுங்கோ எங்களுக்கு உங்கடை எலக்சனும் வேண்டாம், சண்டையும் வேண்டாம்.' – முதியவர் ஒருவரின் பிரஸ்தாபம்.

இவைகள் அனைத்தும் வடமேல் மாகாணசபை தேர்தலையொட்டி அப்பிரதேசத்தில் வாழ்ந்த சாதாரண மக்களின் குரல்கள்.

வடமேல் மாகாண சபைத்தேர்தல் ஜனவரி 26ம் திகதி ஒருவாறு நடந்தேறியது. பொதுஜன ஐக்கிய முன்னணி அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டது. வெற்றிக்களிப்பில் அது நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு கம்பீரமாக நிற்கின்றது. தேர்தலில் மண்கவ்விய ஐ. தே. கட்சி 'ஐயோ! இந்த தேர்தலில் வன்முறை ஊழல் மோசடி தேர்தல் முடிவை நிராகரிக்க வேண்டும் நாங்கள் நீதிகேட்டு நீதிமன்றத்திற்குச் செல்லப்போகின்றோம்' என்று கூக்குரலிட்டு ஒப்பாரிவைக்கின்றது. ஜே. வி. பி தானும் நீதிமன்றம் செல்லப்போவதாகக் கூறுகின்றது. புதிய இடது சாரி முன்னணி 'புரட்சியை' தற்காலிகமாக ஒத்திவைத்துவிட்டு தேர்தலில் குதித்து தசைப்பலவீனத்தைத் தானே அம்பலப்படுத்திவிட்டது. வெகுஜன ஊடகங்கள் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்த நிளிலிருந்து தேர்தல் நடந்து முடியும் வரை 'பத்திரிகா தர்மத்தின்படி தமது புனித சேவையை நிறைவேற்றியுள்ளன. ஆனால் பொது மக்களோ 'பிச்சை வேண்டாம் நாயப்பிடித்தால் போதும்' என்ற நிலையிலுள்ளனர்.

வடமேல் மாகாண சபைத்தேர்தலின் போது வெகுஜன ஊடகங்கள் வகித்த பாத்திரம் என்பது? அவை பத்திரிகாதர்மத்தைக் கடைப்பிடித்தனவா? மக்களுக்கு விசுவாசமாக இருந்தனவா? தமது கடமையைச் சரிவரச் செய்தனவா? அண்மையில் நடந்த இந்த மாகாணசபைத் தேர்தலின் போது ராவய, யுக்திய போன்ற மாற்றுப் பத்திரிகைகளைத் தவிர ஏனைய சிங்கள தமிழ், ஆங்கில தேசிய தினசரிகள் அனைத்தும் உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துக்கூறாமல் தமது விருப்பு வெறுப்பின் படியும் தங்கள் எஜமானர்களுக்கு விசுவாசமாகவும் நடந்து கொண்டது மாத்திரமல்ல கடும் பொய்பிரசாரத்திலும் ஈடுபட்டன. அத்துடன் செய்திகளைத் தங்களின் சார்பிற்கேற்ப மிகைப்படுத்திக்கூறின. அதேபாணியில் தான் வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களும் செயற்பட்டன. அரச சார்புள்ள ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் எரிக்கரைப்பத்திரிகைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் எல்லாப்பத்திரிகைகளுமே அரசுக்குச் சார்பாகவும், உண்மை நிலையை மூடிமறைத்தும் 'புனிதசேவை' புரிந்துள்ளன. இவை அனைத்தும் நம்பகத்தன்மையை இழந்துவிட்டன என்பது மீண்டும் இந்தத் தேர்தலின் போது நிரூபணமாகியது. ஐ. தே. கவின் சார்புள்ள சிங்கள, தமிழ், ஆங்கிலப்பத்திரிகைகளும் ரி.

என். எல் போன்ற தொலைக்காட்சி வானொலி நிறுவனங்களும் 'விட்டேனா பார்' என்ற முறையில் பக்க சார்பாகப் பொப்பிரசாரங்களில் ஈடுபட்டதுடன் உண்மைநிலையை மக்களுக்கு எடுத்துக் கூறாமல் பொய்பிரச்சாரங்களில் ஈடுபட்டும் செய்திகளை மிகைப்படுத்தியும் வந்தன. இத்தேர்தல் காலத்தின்போது மக்கள் பின்தள்ளப்பட்டு அபேட்சகர்களை முன்நிலைப்படுத்தி அவர்களது கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பிரச்சாரம் செய்யப்பட்டதேயொழிய மக்களுடைய கருத்து, மனோ நிலை செயல்பாடு ஒன்றுமே கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவில்லை. இத்தேர்தலின் முடிவை பொதுமக்களல்லாத அபேட்சகர்கள் தான் தீர்மானிப்பார் என்ற பாணியில் போட்டியிட்ட கட்சிகள் நடந்துகொண்டன.

தேர்தலின் போட்டியிட்ட அபேட்சகர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை அதாவது தமது செயல்திட்டங்களை மக்கள் முன்வைத்து அதற்கு முக்கியத்துவம் கொடுத்து மக்களின் தீர்ப்பிற்கு இடம்விடாமல் வன்முறைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் வன்முறைதான் முக்கியபாத்திரத்தை வகித்தது. அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் கொலைப்பயமுறுத்தல்கள், தாக்குதல்கள் அடிதடிகள் மூலம் படுகாயங்கள் பயபீதியூட்டுதல் போன்ற பாணியில்தான் தேர்தலின் அனைத்துச் செயல்பாடுகளும் கையாளப்பட்டன. இருதரப்பினரும் பாஸிச நடைமுறைகளைத்தான் கையாண்டனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரை இத்தேர்தலில் இலகுவாக வெற்றி பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் அனைத்தும் இருந்தன. அப்படியிருந்தும் இப்பிரிவினர் மக்களைச் சரியான முறையில் எடைபோடமுடியாத காரணத்தால், வன்முறைகளில் ஈடுபட்டு தமது முகத்தில் கரியைப் பூசிக்கொண்டனர். பொ. ஐ. மு க்கும் ஐ. தே. கவிற்கும் இடையில் எதுவித வித்தியாசமுமில்லை என்று மக்கள் கருதக்கூடிய வகையில் இவர்கள் வன்முறைகளிலும் ஈடுபட்டுள்ளனர். ஐ. தே. க வினரை வன்முறையாளர்கள் என்று குற்றம் சாட்டும் பொ. ஐ. மு யினர் தாமும் அதே பாதையில் சென்றமை வெகுவாகக் கண்டிக்கப்பட வேண்டியது. பொ. ஐ. மு யினர் வன்முறையைக்கையாண்டுள்ளதை மக்கள் பார்த்தும் கூட ஐ. தே. கட்சியின் கீழ் தாங்கள்பட்ட துன்பதுயரங்களையும், அவல நிலையையும் மீண்டும்மொரு தடவை தாங்கள் அனுபவிக்கக்கூடாது என்ற ஓரே ஒரு காரணத்துக்காகத்தான் வேறு வழியின்றி மக்கள் பொ. ஐ. மு க்கு இந்தத்தடவை வடமேல் மாகாண சபையில் ஆட்சியில் அமர்வதற்கு இடமளித்துள்ளனர். இவர்கள் நிதானமாக நடந்துகொள்ளத்தவறினால் எதிர்காலத்தில், ஐ. தே. க வினருக்கும் நடந்ததுதான் இவர்களுக்கும் நடப்பது நிச்சயம்.

இத்தேர்தலில் ஐ. தே. கட்சியின் பாத்திரத்தை அவதானித்தபொழுது, இவர்கள் தாக்குதல் நடவடிக்கைகளிலும் அதேவேளை தற்காப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்கனர். பொ. ஐ. மு யினர் வன்செயல்கள், ஊழல், மோசடிகள் அதிகாரத் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர் என்று குற்றம் சாட்டினர். இவற்றில் இவர்கள் என்ன குறைந்தவர்களா? வன்செயல்களா? 83ல் தமிழ் மக்களுக்கெதிராக இவர்கள் நடத்திய வன்செயல்கள் கொஞ்சநஞ்சமல்ல? 83ல் தமிழ் மக்களுக்கெதிரான 'டயர் கலாசாரம் இன்னும் தொடர்கின்றதே. எம்பிலிப்பிட்டியா, பட்டலந்த, ஏன் வடகிழக்கில் இவர்கள் புரிந்த இனப்படுகொலை வன்செயல் பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஏன் இன்று கூட தமிழ் மக்களுக்கெதிராக

14 ⟹

# வலி

நேற்று என்றியள் இன்று என்றியள் எப்ப முடியுமோ?

....... அப்பா சொன்னார்: உன்ர காலத்தில முடியும்.

என்ர பிள்ளேன்ர காலத்திலாவது முடியுமா?

வள் ...... 3ம் தரப்பு மத்தியஸ்தமா!!

வள் ...... 3ம் தரப்பு அறிமுகமா!! (Facilitation)

கொன்று களைத்துவிட்டோம். உடல்களை எண்ணிக் களைத்து விட்டோம். வீரப்புதல்வர்கள் / மாவீரர்கள் என்றும் ஆர்ப்பரித்துக் களைத்து விட்டோம். துரோகி என்று கூவிக் களைத்துவிட்டோம். இரத்தம் சிந்தக் கொன்றாகிவிட்டது. டயர் எரித்தாகிவிட்டது. கங்குல்களுக்குள் குண்டு வைத்தாகிவிட்டது. மரண தண்டனை நிறைவேற்றியும், வரி செலுத்தியும் களைத்துவிட்டோம். கிராமங்கள் அழிந்து மக்களைக் கொழுத்தி... எல்லாம்

அப்படியே இருக்கின்றது. ஒன்றும் புதிதாக இல்லை. புதிய ஆயுதங்களைத் தடவிக் களைத்துவிட்டோம். எல்லாப் புதிய ஆயுதங்களைப் பாவித்தும் களைத்துவிட்டோம். இனியென்ன இருக்கின்றது பேசிப்பார்ப்போம். ஏதாவது புதிதாக இருக்கின்றதா என்று!

எத்தனை முறை பேசிப்பார்த்துவிட்டோம். ஒவ்வொரு முறை பேசி முடித்த பின்பும் இரண்டாம் கட்டம் மூன்றாம் கட்டம் என்றும் அப்பப்போ இன்னும் எத்தனை கட்டமோ! முடிவிலி தூரத்தில் ஒருவருக்கும் சமாதானம் வரவிருப்பமில்லை. எல்லோரும் கொலைக்கும் மரணத்துக்கும் சதைக்கும் இரத்தத்துக்கும் பழக்கப்பட்டபின்பு என்ன சமாதானம். சமாதானத்தையே மறந்துவிட்டோம். எங்களுக்கே போர் இல்லை என்றால் ஏதோவிடியாத மாதிரி.

மிகவும் நன்றாக தெரியும். போரால் சமாதானமோ! விடுதலையோ! ஏற்படாது! என்றும் இரத்தத்தையும் சதையையும் தவிர!

பிறகு ஏன்? சமாதானப் போரும், விடுதலைக்கான போரும்.

சமாதானம் எங்களுடைய அதிகார நிலைகளை உடைத்துவிடும் என்ற பயம். அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள.

பிறகு ஏன் சமாதானப் பேச்சு? நான் சமாதானத்தின் நண்பன். அவன்தான் எதிரி என்று உலகுக்குக் காட்ட! இருதரப்பும் இதைத்தான் சொல்கிறது. அதற்குப் பிறகு இன்னும் வெளிநாட்டு உதவிகள், யுத்த உபகரணங்கள், பணம் இன்னபிற

சமாதானத்தை குலைத்தல் எப்படிச் சாத்தியமாகும்: செய்ய முடியாத நிபந்தனைகளை விதித்தல். இழுத்தடித்தல். நட்புத் தன்மைகளை, சூழலை இல்லாதொழித்தல். சமாதானத்திற்கு சாதகமான கோட்பாட்டாளர்களை அழித்தல். சிறுபான்மைக் கருத்துள்ளோரை அழித்தல். திரும்பவும் திரும்பவும் ஆயுதங்களாலும் கொலைகளாலும் சமாதானம் ஏற்படும் என நம்பவைத்தல்.

அதற்கு? ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டியபடி அவன்தான் சமாதானத்தின் எதிரி என்று கூவியபடி மீண்டும் கொலைகள்...... மீண்டும் மூர்க்கமாய் அதி மூர்க்கமாய்க் கொலைகள் சமாதானத்தின் களங்களாகவும், விடுதலையின்களங்களாகவும் போதித்தல். இருபக்கமும் உள்ள மக்களை நாம் போருக்காக என்று உச்சரிக்கப் பழக்குதல் 'நான் பலமாயுள்ளேன்' நான் ராணுவமாகிவிட்டேன் என்று எத்தனை ஆயிரம் கொலைகளுக்குப் பின்பும் சூழலை, கொலையில்தான் தீர்வு என சிந்திக்க வைத்தல்.

இதற்குத் தேவை: மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் எனக்கு நினைவாக இருக்கின்றது. இந்தியப் படைகள் வரும்போது மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்றபோது இரு தரப்பும் சந்தோஷம் / சிலர் எதிர்க் கருத்துக் கூற, தெற்கிலே மீண்டும் புரட்சி ஏற்பட ஈற்றிலே யுத்தமே தீர்வு என்று திணிக்கப்பட்டது.

90களில் அரசாங்கம் மூன்றாம் தரப்புக்கு அறிக்கை விட அது மறுதரப்பால் நிராகரிக்கப்பட்டது. இன்று, அன்று 3ம் தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரித்தவர்கள் மூன்றாம் தரப்பு வேண்டும் என்று கூவ அரசாங்கம் நிராகரிக்கின்றது. மூன்றாம் தரப்பு மத்திஸ்தத்தை யோசிக்க அன்று கறுப்பு, வெள்ளை பூனைகள் நரியின் மூலம் அப்பம் பங்கிட்ட ஒரு நாடகம் (அப்பம் ÷ 2) நினைவு வருகின்றது. அப்பம் பங்கிட, பங்கிட்டு நரி தன்பையில் போட்டு முடிக்க கறுப்பு, வெள்ளை பூனைகளை பார்த்து நரி கேட்கும்: உங்களுக்கு பிரச்சினை இருக்கின்றதா? என்று. உடனே சிங்களத்திலும் தமிழிலும் பூ னைகள் கூறும் இல்லை என்று. ஏன் என்று தெரியுமா! இப்போ அப்பம் நரியின் கையில். நரி போனபின்பு திரும்பவும் பூனைகள் அடிபடும் நீதான் நரியைக் கொண்டுவந்தாய் என்று, திரும்பவும் யுத்தம்.

Facilitation என்னும் அறிமுகம் மட்டும்தான். இரு தரப்பும் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களாகவே பேச வேண்டும். இதிலும் நன்மையும் தீமையும் உண்டு (ஆராய்க!)

மூன்றாம் தரப்பு என்னும் போது, மூன்றாம் தரப்பு இரு தரப்புக்கும் குட்டும். (இந்தியப்படைகள் நினைவு வரும்) நன்மை! தீமை உண்டு. (ஆராய்க!)

ஆனால் இரு தரப்பும் ஒன்றை ஏற்பதும் மற்றையதை நிராகரிப்பதும் கோட்பாட்டு ரீதியில் அல்ல. யுத்தத்தை தொடர எது தங்களுக்கு கூட உதவும் என்பதற்காக!

எனவே இந்த Facilitation !! இந்த மத்தியஸ்தம் சம்மந்தமாக யார் என்ன பேசினாலும் அது எங்களை முட்டாளாக்கி திரும்பவும் போரைத் தொடக்கும் உத்திதானே? (அதுவும் போரை தொடங்குவது தனிநபரின் கையில்) இல்லை எனில் விளங்கவில்லை? விளங்குகிற மாதிரி நடிக்கும் நீங்களாவது சொல்லுங்கள்.

- லவகுஷா

## சித்தத்தின் உள்ளே!

புதன் கிழமைகளில் இரவு 9.30 - 9.45 வரை இ. ஒ. கூட்டுத்தாபன தேசிய சேவையில் ஒலிபரப்பாகும் மேற்படி நிகழ்ச்சி மனிதர்களின் மனநல நாடிகளைப் பிடிக்க முற்படுகிறது. இன்று தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் இன்னோரன்ன நெருக்குதல்களின் விளைவை, பாரதூரமான நடத்தைகளுக்கு விளக்கம் காண முற்படுவது வரவேற்கப்படவேண்டிய ஒன்று. இன்னும் ஆழ, அகலத்துக்கு சென்றால் தடைகள் பிறக்கும். அதைத் தூண்டுவதற்காகவே சிலர். 'அண்ணன் எப்ப காலியாவான் திண்ணை எப்போ காலியாகு'மென காத்திருப்பவர்களுக்கு மத்தியில் இப்படியாக வளைந்து கொடுத்து ஒரு நிகழ்ச்சி வருவது காலத்தின் தேவை.
ஆனால் நிகழ்ச்சி சம்மந்தப்பட்டவர்கள் செவிசாய்ப்பவர்கள் மனனம் செய்வதற்காக சில நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் ஒலிபரப்பு செய்வார்களேயானால் (தேன்தமிழ் நாதம், கவிதைக் கலசம், நாளைய சந்ததி போன்ற இன்னோரன்ன) சித்தம் கலங்கும் என்பதில் ஐயம் தெளிவுறுக!
இசை மேலும் மேலும் மனதை நோகடிக்க முற்படுகிறதே! என்ன செய்யலாம்?
கடந்த நிகழ்ச்சியில் மிகப் பிரபலமான கடிதம் ஒன்று பற்றி குறிப்பிட்டதாவது.
'கமலாவுக்கு என்னைப் பிடிக்காவிட்டாள் தங்கை விமலாவிடம் கொடுக்கவும்...'
இதையேன்.....?

--------------------------------------------- ரசிகர்.

## வட்டுக்கோட்டைக்கு பாதை ..................................

'விபவி' ஆசிரியருக்கு,

தங்களின் 99 ஜனவரி நிரல் - 25 சஞ்சிகை பார்த்தேன். அதில் 'சிவசேகரமும் சொல்லமறந்தவையும்' என்ற குறிப்பை 'பயனிலையாள்' என்ற பெயரில் எழுதியிருப்பதைப் படித்தேன். விபவியின் பரிசளிப்பு விழாவில் நான் கலந்துகொள்ளவில்லை. எனவே அங்கு பேராசிரியர் சிவசேகரம் பேசியவை என்ன என்பதனைப் 'பயனிலையாளரின்' 'இரத்தினச் சுருக்க' உரை பற்றிய குறிப்பில் பார்க்க முடியாதுள்ளது.

அந்த இரத்தினச் சுருக்க உரை பயனியையாளரின் வாய்ப்புக்கேற்ப எழுதப்பட்டுள்ளதெனச் சந்தேகிக்கின்றேன்.

'விபவி' நடத்திய நிகழ்வில் பேசிய சிவசேகரத்தின் சரியான உரையை உங்கள் 'ஒலிப்பேழை'யிலிருந்து சரியான படி பிரசுரிப்பின் எம்போன்றவர்கள்க்கு அவ்வுரையின் உண்மைத்தன்மையைத் தெளிய ஏதுவாயிருக்கும்.

பேராசிரியர் சிவசேகரத்தின் உரை எனக் குறிப்பிட்டு இரத்தினச் சுருக்க உரை அவரை அவமதிப்பதாகவே நான் கருதுகிறேன்.

உங்கள் நிகழ்வில் கலந்து நிகழ்த்திய உரையை உங்கள் சஞ்சிகையைப் பயன்படுத்தித் 'தவறாக' வெளியிடுவது எத்தகைய தார்மீகம்.

அரச ஊடகங்களில் ஆற்றப்படும் உரையைத் தமக்கேற்றபடி திரித்துக் காட்டித் தமது அதிகாரத்தை நிறுவுவது போல் அரச சார்பற்ற நிறுவனமான விபவியும் 'அதிகாரத்தைப்' பாவிக்க முற்படுகிறதா என்ற கவலை ஏற்படுகிறது.

பேராசிரியர் சிவசேகரம் பேசிய உரை எனக்குறிப்பிட்ட 'இரத்தினச் சுருக்கத்தை' என்னால் நம்பமுடியாதுள்ளது.

எனவே அவரது உண்மையான உரையை பிரசுரம் செய்வது விபவி சஞ்சிகையின் தார்மீகக் கடமை எனக் கருதுகின்றேன்.

'இலக்கியப் போக்குகள்' பற்றிய சிவசேகரத்தின் உரைக்கு 'இலக்கிய பண்புகள்' பற்றிய பயனிலையாளரின் கேள்வி பொருத்தமற்ற 'வட்டுக்கோட்டைக்குப் பாதை கேட்க துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு' என்பதாக அமைகிறது.

பதுங்கியிருக்கும் பயனிலையாளரின் இரத்தினச் சுருக்கத்தை சற்று விபரித்து உண்மையான உரையைப் பிரசுரிப்பீர்கள் என்ற எதிர்பார்ப்புடன்.

சோ. தேவராஜா.

பேரினவாதக் குழுக்களையும் ஒருசில பௌத்த தேரர்களையும் வைத்து வன்முறைகளைத் தூண்டும் வகையில் செயல்பட்டுக் கொண்டுதானிருக்கின்றனர். ஊழல் மோசடிகளையும், வன்முறைகளையும் பற்றிக்கதைப்பதற்கு ஐ. தே, க விற்கு என்ன அருகதையுண்டு? யாழ்ப்பாணத்தில் நடந்த மாவட்ட சபைத் தேர்தலின் போது ஐ. தே. க அரசாங்க அமைச்சர்களான சிறில மத்யு, காமினி திஸாநாயக்கா ஆகியவர்களின் தலைமையில் நடந்த தேர்தல் மோசடிகளையும் வன்முறைகளையும் தமிழ் மக்கள் மறந்து விடமாட்டார்கள். இந்த வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகலிலிருந்துதான் சிற்றூழியர்களை (பீயோன்) யாழ்ப்பாணத்தில் நடந்த மாவட்ட சபைத் தேர்தலில் தேர்தல் நிலையங்களுக்குப் பிரதம தேர்தல் அதிகாரிகளாக வைத்து வாக்களிப்பு நடத்தினார்கள். ஏன் ஆறு வாக்குச் சீட்டுப்பெட்டிகளை யாழ் நகரிலுள்ள சுபாஸ் ஹோட்டலுக்கு எடுத்துச் சென்று வாக்குகளை நிரப்பிவிட்டு கொண்டுவந்து கொடுத்தவர்கள்தானே இந்த ஐ. தே. க அமைச்சர்கள். அதுமாத்திரமா, தமிழ் மக்களுடைய அரும்பெரும் பொக்கிஷமான யாழ் பொது நூலகத்திற்குத் தீவைத்து எரித்து நாசமாக்கிவன்செயல் கும்பலுக்குத் தலைமை தாங்கி நடத்திவர்கள்தான் ஐ. தே. க அரசாங்கத்தின் அமைச்சர்களான சிறிலமத்யுவும், காமினி திஸானாயக்காவும். இதே ஐ. தே. க வினர்தான் இன்று வடமேல்மாகாண ஊழல் மோசடி வன்செயல்கள் பற்றி ஒப்பாரி வைக்கின்றனர்.

இந்தத் தேர்தலை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது மலையைக்கிள்ளி எலியைப் பிடித்த முதுமொழிதான் நினைவுக்கு வருகின்றது. வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்காக, இதில் போட்டியிட்ட சகல தரப்பினரும் பிரச்சாரத்திற்காகப் பெரும் தொகையான பணத்தைச் செலவிட்டுள்ளனர் என்று காணக்கூடியதாக இருக்கின்றது. பல இலட்சக்கணக்கான சுவரொட்டிகள், பிரமாண்டமான பல உருவமைப்புக்கள், துண்டுப் பிரசுரங்கள் ஆகிய வற்றிற்கு பல இலட்சம் ரூபாக்கள் செலவிடப்பட்டுள்ளன. தேர்தல் கூட்டங்கள் நடந்த மைதானங்களிலும், கிராமங்கள், பட்டினங்கள் நகரங்கள் எங்கும் பரவலாக அலங்காரம் செய்வதற்காக உபயோகிக்கப்பட்ட பலவர்ணமைகள், பச்சை, நீல சிவப்பு, பொலித்தீன்கள் ஆகிய வற்றிற்கும் பல இலட்சம் ரூபாக்கள் செலவழிக்கப்பட்டுள்ளது. இத்தேர்தலுக்கான வேட்பாளர் மனுத்தாக்கல் செய்த நாளிலிருந்து தேர்தல் முடியும் வரை உபயோகிக்கப்பட்ட வாகனங்களுக்காகவும் பிரச்சார கூட்டங்களுக்காவும் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவளிக்கப்பட்டுள்ளன. இவைகளையும் பெறுபேறுகளையும் கணக்கிட்டால் இது வீண்விரயம் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியுள்ளது. மக்களின் மனதில் அச்சுறுத்தல்கள் மிரட்டல்கள் வன்செயல்கள், காயங்களை விளைவித்தல், கொலைகள் ஆகியவற்றின் மூலம் பதட்டத்தையும் பயபீதி உணர்வையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஜனநாயக ரீதியில் இனிமேல் தேர்தல்களை நடத்த முடியாது. என்ற உணர்வை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளதுடன் ஜனநாயகத்தின் மீது அவர்களுக்கு இருந்த நம்பிக்கையை இழக்கச் செய்துவிட்டது. வடமேல் மாகாணத்தேர்தல், மூலம் ஜனநாயகத்தின் சாம்பல் மேட்டில் வன்செயல் தேர்தல் கலாசார யுகம் பிறந்துவிட்டது எமது நாட்டில்!

## உலகில் காடழிப்பு.

ஒரு காலத்தில் உலகில் 300 இலட்சம் சதுரமைல்கள் அடத்தியான காடுகள் இருந்தன. ஆனால் இன்று 100 இலட்சம் சதுரமைல் காடுகள் தான் மிஞ்சியுள்ளன. அதாவது உலகின் மூன்றில் இரண்டுபங்கு காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன.


ஆசியாவில்தான் பெருமளவுகாடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அதாவது ஆரம்பத்தில் இருந்த காடுகளில் 88 வீதமான காடுகள் ஆசிய நாடுகளில் அழிக்கப்பட்டுவிட்டன.

ஐரோப்பாவில் 62 வீதம், ஆபிரிக்காவில் 41 வீதம், லத்தீன் அமெரிக்காவில் 41 வீதம், வட அமெரிக்காவில் 39 வீதம் காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன.

உலகின் மிகப் பெரிய உஷ்ணவலய மழைக்காடு அமோனியாவில் தான் உள்ளது. முன்னர் இருந்த தொகை தற்பொழுது 85 வீதம் இப்பகுதியில் இருக்கின்றது.

இப்பிரதேசத்தில் 15 வீதம் காடு மாத்திரம்தான் இதுவரை அழிக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல இந்த 85 வீதமானகாடு தொடர்ச்சியாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

காடு அழிப்பால் உலகில் பெருமளவில் மழைவீழ்ச்சி குறைந்துவருகின்றது. அத்துடன் மண் அரிப்பும், மண்சரிவும் ஏற்படுகின்றன. அத்துடன் வனவிலங்குகளும் பட்சியினங்களும் அழிந்து போகின்றன அல்லது இவை இடம்பெயர்கின்றன.


மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்)*

மிகப்பாரதூரமான குற்றங்களில் ஒன்றான இத்தாக்குதலை சிவில் விமான நிறுவனத்தின் உப தலைவரினால் விசாரணை நடாத்தவிருக்கும் அரசின் முடிவு உள் நிர்வாக தேவைகளுக்கு பயனுடையதாய் இருக்கலாம். ஆனால் இது ஒரு உண்மையான உள்நோக்கமற்ற விசாரணையாக இருக்கமாட்டாது. பாரபட்சமற்ற சர்வதேச அவதானிகள் அடங்கிய ஒரு குழுவே சந்தேகத்துக்கிடமின்றி விசாரணையொன்றை நடாத்த தகுந்தது. அரச குற்றச்சாட்டப்படும் பட்சத்தில் அரசு [illegible] குழு அமைக்கப்படவிருக்கக் வேண்டும். இல்லையெனில் நம்பிக்கையின்மையே தொடரும்.

மேலதிகமான தகவலைப் பெறவிரும்பினால் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

WASALA PUBLICATIONS
153, Samankara Road,
Dehiwala

தேசிய கூலை இலக்கியப் பேரவையின்

# வெள்ளி விழா

பெப் 27 சனி மாலை 3.00 - மாலை 6.00 வரை

## ஆய்வரங்கு

**இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இலக்கியம்.**

கவிதை, சிறுகதை, நாவல்.

இந்தியாவிலிருந்து எழுத்தாளர், கலைஞர்களும் கலந்துகொள்வார்கள்.

## கலை விழா

பெப் 28 ஞாயிறு மாலை 4.00 தொடக்கம்

கவிதா நிகழ்வு, கதா நிகழ்வு, புத்தக பரவலாக்கலுக்கான கௌரவம்.
சிறப்புச் சொற்பொழிவு.
குருநகல், மலையகம், வவுனியா, கொழும்பு கலைஞர்களின் வீதி நாடகங்கள்.

**அன்புடன் அழைக்கின்றோம் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்திற்கு.**

## சிசு வதை

உடலை வளர்த்தாய் மனதை வளரவிடாமல்
சொல்லித் தந்தாய் கேள்வி கேட்க முடியாமல்
வயதுக்கு வயது அறிவூட்டினாய் செயற்பட வழியில்லாமல்.

உயிரைத் தந்து உணர்சிகளைப் பறித்தாய்
பயத்தைக் கற்பித்து பாடத்தை மூடிவிட்டாய்.

சாட்சிகள் எத்தனை சரியாய் இருப்பினும்
மன்னிப்பை யன்றி மரணதண்டனைதான் விதிக்கிறாய்.

எனை ஒத்தவர்கள் குளிரோடையிற் படகுவிட்டுக் குதூகலிக்கிறார்கள்.
அனலோடைக்குள்ளகப்பட்ட என் ஓடத்துக்கு துடுப்பாவது நீ தரவில்லை.

வாரிசுகளை வரவேற்க அவர்கள் கைகளில் பூங்கொத்துக்கள்.
உன் கரத்தில் மட்டும் ஆயுதம்!!?

-அனார்-

# ஒளி மாசடைதல்.

சாலை ஓரங்களிலும் உயர்ந்த பல தொடர்மாடிக்கட்டடங்களிலும் பிரமாண்டமான விளம்பரக் கோபுரங்களிலும் பொருத்தப்பட்டுள்ள அதி சக்திவாய்ந்த ஊடறுத்துச் செல்லக்கூடிய செயற்கை ஒளியூட்டல் இயற்கையொளியை மாசுபடுத்துகின்றது. இது பல ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல மனிதனுடைய விழிக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக பிரான்ஸிலுள்ள பரீஸ் மா நகரில் இரவு வேளைகளில் பொருத்தப்பட்டுள்ள அதி சக்திவாய்ந்த செயற்கை ஒளியூட்டல், இயற்கை ஒளியை மாசுபடுத்துவதால் வானியல் விஞ்ஞானிகள் நடத்துகின்ற நட்சத்திரங்களைப் பற்றிய ஆராச்சிக்கு பெருமளவு பங்கம் ஏற்படுத்துகின்றது என்று முறையிட்டுள்ளார்கள். இந்த அதிசக்தி வாய்ந்த இயற்கை ஒளியூட்டலில் அரைவாசிக்கு மேற்பட்டபகுதி வானத்தை நோக்கியே பாய்ச்சப்படுகின்றது. இது பூமிக்கு மேற்பரப்பிலுள்ள இயற்கை ஒளியை மாசுபடுத்துகின்றது. இது வானத்திலுள்ள நட்சத்திரங்கள் எமது கண்களின் பார்வையில் புலப்படுவதைத் தடுக்கின்றது. உ~மாக வட ஐரோப்பாவில் ஒரு தெளிவான இருள்படந்த இரவில் எதுவித கண்ணாடிகளதும் உதவியின்றி சாதாரண கண்களால் 2000 நட்சத்திரங்களைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் ஒரு பட்டணத்தின் சுற்றுப்புறத்தில் வெற்றுக்கண்ணால் 200 நட்சத்திரங்களைத்தான் பார்க்கமுடியும். ஆனால் அதிசக்திவாய்ந்த வலுவுள்ள, ஊடறுத்துச் செல்லக்கூடிய செயற்கையொளி பாய்ச்சப்பட்ட நகரத்தின் நடுப்பகுதியில் இரவு வேளைகளில் 20 நட்சத்திரங்களை மாத்திரம் தான் வெற்று விழிகளால் பார்க்கக் கூடியதாக இருக்கும். இதற்கு எதிராக தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இன்னும் 25 வருடங்களில் இப்பகுதியில் இரவு வேளையில் எந்த ஒரு நட்சத்திரத்தைத்தானும் பார்க்க முடியாத நிலை ஏற்படுவது உறுதி எனறு வானவியல் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

ஒளியூட்டல் அவசியம்தான். இரவு வேளைகளில் நடைபெறுகின்ற குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும் வீடுகளில் வசிப்பவர்களுக்குப் பாதுகாப்பு உணர்வைக் கொடுப்பதற்கும் செயற்கை ஒளியூட்டல் அவசியம்தான். ஆனால் தனிப்பட்டவர்களாலும் பல வர்த்தக நிறுவனங்களாலும் பாதுகாப்புப் போர்வையிலும் விளம்பரத்திற்காகவும் செய்யப்படுகின்ற அதி சக்தி வாய்ந்த, வலுவான, ஊடறுத்துச் செல்லக்கூடிய செயற்கை ஒளியூட்டல்கள் அவசியம்தானா? இதனால் இயற்கை ஒளிமாசுபடுவதுடன் மின்சாரமும் பெருமளவு விரயமாக்கப்படுகின்றது. எந்த ஒரு மனிதனும் நட்ட நடு இரவில் அதிசக்தி வாய்ந்த ஒளியூட்டப்பட்ட விளம்பரத்தை நின்று நோக்கமாட்டான். அப்படி நின்று பார்ப்பவன் ஒரு படுமுட்டாளாக அல்லது பயித்தியக்காரனகத்தானிருப்பான். அத்துடன் இந்த அதிசக்திவாய்ந்த ஒளியூட்டல் மனிதனுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துவதுடன் அவனது அமைதியான தூக்கத்தையும் கெடுத்துவிடுகின்றது. இந்தப் பாதிப்புக்களை அகற்றுவதற்குத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். முதலில் அதிசக்தி வாய்ந்த செயற்கை ஒளியூட்டலைக் கட்டுப்படுத்தி குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். செயற்கை ஒளி செங்குத்தாக மேலே பாய்ச்சப்படுவதைத் தடுப்பதற்கு ஒளி கீழ்நோக்கிப் பாயக்கூடிய வகையில் ஒளித்தடுப்புக்களைப் பொருத்தவேண்டும். ஒளியை உறிஞ்சக்கூடிய அடர்த்தியான கறுப்புத்தார் சாலைகளுக்கு ஊற்றப்பட வேண்டும். அத்துடன் பொதுக் கட்டடங்களிலும், வர்த்தகக் கட்டடங்களிலும் பொருத்தப்பட்ட விளம்பர கோபுரங்களிலும் உள்ள அதிசக்திவாய்ந்த செயற்கையொளியைப் பாய்ச்சுகின்ற மின் விளக்குகள் இரவு பதினொருமணிக்குப்பின் அணைக்கப்பட வேண்டும்.

தான் நல்ல பலமுடையவன். சர்வவல்லமையுடையவன். பெரிய சாம்ராஜ்யத்தின் மன்னன் என்ற கர்வம் அந்தச் சிங்கத்திற்கு.

ஒருநாள் மாலை நேரம்.

செவ்வொளி வீசும் அஸ்தமன சூரியன் விரிந்து பரந்துகிடக்கும் அந்திவானத்தை இரத்தமயமாக்கிக் கொண்டிருக்கின்றது.

வனப்பு மிக்க இக்கண்கொள்ளாக் காட்சி அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருக்கின்ற இந்தச் சிங்கத்திற்கு களிப்பூட்டுகின்றது.

'இதோ இந்தப் பரவசமூட்டும் ஒளிப்பிரவாகம் எனது சாம்ராஜ்யத்திற்கு எழிலூட்டுகின்றது. இந்தப் பாலைவன சாம்ராஜ்யத்தின் மாமன்னனாகிய நான் இந்த ஒளிப்பிரவாகத்தைக் கைப்பற்றி அதை எனது ஆட்சிப்புலத்திற்குள் கொண்டு வந்து அடக்கிவைத்திருக்கத் தவறினால் அது எந்த நேரத்திலும் மங்கி அழிந்து மறைந்துவிடும். ஆகையால் இந்தக் கணமே இந்த உன்னத ஒளிப்பிரவாகத்தைக் கைப்பற்றுகின்றேன்.'

சிங்கம் இறுமாப்புடன் கூறிக்கொண்டு தனது உடலைச் சிலிர்த்து நிமிர்ந்து கம்பீரமாக நிற்கின்றது.

இரத்தம் சூடேறி கொதித்துப் பீறிட்டு உடலெங்கும் வீறாப்புடன் ஓட, தூசிப்படலத்தை எழுப்பிக் கொண்டு மேற்குத் திசையை நோக்கிப் பாய்ந்தோடிக்கொண்டிருக்கின்றது சிங்கம். அது பாய்ந்து செல்லச் செல்ல, அஸ்தமன சூரியன் பின்னே பின்னே சென்று வானத்தின் விளிம்பை நோக்கி இறங்கிக் கொண்டிருக்கின்றான். மாலை இருள் மெல்லமெல்ல பிரபஞ்சத்தை விழுங்கத் தொடங்குகின்றது.

பாலை வனத்தின் அரும் பெரும் செல்வமான ஒரு ஏரி, பாய்ந்தோடிக் கொண்டிருக்கின்ற சிங்கத்தைத் தடுத்து நிறுத்துகின்றது.

அந்தி வானத்தின் செஞ்சூரியன் ஏரியின் பளிங்கு போன்ற நீரில் பிரதிபலித்து செவ்வொளி வீசுகின்றது.

'நான் தேடிக்கொண்டிருக்கின்ற இரை இங்கேதான் இருக்கின்றது'

கூறியபடியே வீறாப்புடன் கர்ச்சித்துக் கொண்டு சிங்கம் ஏரிக்குள் பாய்ந்து மூழ்கி இறக்கின்றது.

'ஒருமாயைத் தோற்றத்திற்காக என்னைத் தியாகம் செய்வதிலும் பார்க்க வேறு எந்த மகத்தான முடிவை என்னால் ஏற்றுக்கொள்ள முடியும்?'

சிங்கத்தின் இந்த இறுதி வார்த்தைகள் காற்றில் மிதந்து சங்கமித்துமடிகின்றது.

# இந்தியாவில் சூறையாடப்படும் சிறுவர்கள்

* இந்தியாவில 1981ம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 13.6 கோடி. இவர்களில் ஆண் தொழிலாளர்கள் 8.1 கோடி. பெண் தொழிலாளர்கள் 5.5 கோடி.

  கொத்தடிமை குழந்தைத் தொழிலாளர் 5 கோடி 50 இலட்சம்.

* பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை 8 கோடி 20 இலட்சம். நூறு பேர் பள்ளியில் சேர்ந்தால் 23 பேர் வரைதான் 5ம் வகுப்பை எட்டிப்பிடிப்பர். மற்றையோர் படிப்பதில்லை.

* தேசிய குழந்தைகள் புள்ளிவிபரப்படி 1971ற்கும் 1981 க்கும் இடையில் வேலை செய்கின்ற குழந்தைத் தொழிலாளர்கள் 1 கோடி 80 இலட்சம்.

* அரச சார்பற்ற நிறுவனமான ஒப்பரேசன் றிசேச் குறூப்பின் ஆய்வின்படி 1971க்கும் 1981க்கும் இடையில் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 4 கோடி 40 இலட்சம்.

* அதிக குழந்தைகள் வேலைக்குச் செல்லும் பிரதேசம் ஆந்திர மாநிலம்.

  இங்கு உழைக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 8.7 இலட்சம்

* குட்டி ஜப்பான் என்று கூறப்படுகின்ற சிவகாசியில் தீப்பெட்டி தயாரித்தல் பட்டாசு தயாரித்தல் ஆகிய தொழிலில் ஈடுபடுகின்ற சிறுவர் தொழிலாளர்களின் எண்ணிக்கை 4000விருந்து 5000 வரை.

* உத்தரப்பிரரேதசத்தில் கம்பளங்கள் தயாரித்தல் தொழிலில் ஈடுபடும் சிறுவர்கள் 4000 லிருந்து 6000 வரை.

  வைரக்கல் தொழிலில் ஈடுபடும் சிறுவர் 1500

  கண்ணாடிப் போத்தல் பாத்திரங்கள் தயாரிக்கும் சிறுவர்கள் 4500

  நெசவு கல்லுடைப்பு தொழிலில் 2000

* உத்தரப்பிரதேசத்தில் கண்ணாடி மட்பாண்டம் பட்டு. கம்பளம் போன்ற தொழிலில் ஈடுபடும் சிறுவர் 32000

* ஒரிசா மாநிலத்தில் கண்ணாடி, மட்பாண்டம், கம்பளம், பட்டு போன்ற தொழிலில் ஈடுபடும் சிறுவர்கள் 23,761

* 1991ம் ஆண்டின் மதிப்பீட்டின்படி இந்தியாவில் 5 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 25 கோடி. தொழில் பர்க்கின்ற சிறுவர்களின் எண்ணிக்கை 1 கோடி 25 இலட்சம்.

* சுயாதீனமாக எடுக்கப்பட்ட மதிப்பீட்டின்படி சிறுவர் தொழிலாளர்கள் 4 கோடிக்கும் 10 கோடிக்கும் இடைப்பட்டது.

* இந்தியாவில் ஐ. நாவின் சிறுவர் நலனுக்காகச் செயற்படடுக் கொண்டிருக்கின்ற நிறுவனங்கள் 16.

வட்டத்துக்குள் வட்டம் போட்டு ஒரு புள்ளியிட்டு ஏறியிருக்கிறது நம் சமூகம். தனக்குள் 1008 முரண்பட்டுகளுடன் இழுபட்டு, தன்னைச் சுற்றியிருக்கும் ஒவ்வொன்றுடனும் முரண்பட்டு குழுமி - மதம், சாதி, என முரண்பாடுகள் பெருக்கங்களின் விருத்தியாகி இனம் என்பதில் வந்து முகாமிட்டுக்கொண்டு அடுத்த இனத்தவனின் தலையைக் கொய்து; அல்லது கொய்ய விளக்கம் சொல்லும் என் சமூகம்.

மனித விடுதலைதான் நமக்கு முக்கியம். மனித விடுதலைக்கு மார்க்கியம் திறவுகோல் என்ற முறையில்தான் மார்க்சியத்தை நாம் நேசிக்கிறோம். மார்க்சியத்தைத்தாங்கிக் கோண்டிருப்பது நமக்கு நோக்கமல்ல.

- ஞானி

மனிதன் வீண் தற்பெருமை கொள்பவன். அவன் தன்னைச் சுற்றிலும் தன் உருவத்தைக் காட்டும் கண்ணாடிகள் சூழ்ந்திருக்க வேண்டும் என்று விரும்பகிறான். மேலும் அக்கண்ணாடிகள் தன் உருவத்தை மிகவும் பெரிதாக்கிக்காட்டுபவையாக இருந்தால் எவ்வளவு நல்லதாக இருக்கும் என்று கருதுகிறான்.

ஜூலியன் ஹக்ஸ்லீ




K. Saddanathan
21, Saddanathar Rd
Nallur
Jaffna


விபவி கலாசார மையம்
81/4 பாகொடை வீதி
நுகேகொடை. தொ. பே. 812407